ஸொரனாதொட்ட பிரதேச சபை

பதுளை மாவட்டம்

-----------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஏப்ரில் 28 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஜூன் 03 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஜூலை 28 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

---------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர்த்து, ஸொரனாதொட்ட பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு தத்துவங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-------------------------------------------

(அ) சபையினால் உள்நாட்டுக் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தில் இருந்து பெற்றிருந்த கடன் தொடர்பாக மீளாய்வாண்டின் போது செலுத்த வேண்டிய ரூபா 708,706 இற்கான வட்டியினை கணக்கீடு செய்யப்படாமையால் மீளாய்வாண்டிற்கான செலவு ரூபா 708,706 இனால் குறைவாகவும் 2012 ஆண்டு முதல் 2014 திசெம்பர் 31 திகதி வரை செலுத்தப்பட வேண்டிய ரூபா 1,765,699 தொகை தொடர்பாக கடன் கொடுத்தோரின் கீழ் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாமையால் பொறுப்புக்கள் ரூபா 1,765,699 இனால் குறைவாகவும் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்தின் ஏற்பாடுகளின் கீழ் பொது மக்களின் பயன்பாட்டுக்காக சபைக்கு வழங்கப்பட்டிருந்த 392 கல்வனயிஸ் கொடிக் கம்பங்களின் பெறுமதியாகிய ரூபா 387,500 இனை மூலதனப்படுத்தப்படாமையால் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலையான சொத்துக்களின் பெறுமதி மற்றும் மூலதன ஈடுபடுத்தலுக்கு வருமானத்தின் பங்களிப்பு கணக்கு மீதி ரூபா 387,500 வீதம் குறைவாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(இ) உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சின் ஏற்பாடுகளின் கீழ் சபைக்கு வழங்கப்பட்டிருந்த 10 பல்கரும நடமாடும் கடைகளின் பெறுமதி ரூபா 265,000

தொகையில் கணக்கீடு செய்யாமையால் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலையான சொத்துக்களின் பெறுமதி மற்றும் மூலதன ஈடுபடுத்தலுக்கு வருமானத்தின் பங்களிப்பு கணக்கின் மீதி ரூபா 265,000 வீதம் குறைவாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(ஈ) மீளாய்வாண்டின் போது 03 சந்தர்ப்பங்களில் நிர்மாண வேலைகளுக்காக செலுததப்பட்ட ரூபா 669,515 இற்கான முற்பணத் தொகையினை ஆண்டிற்கான செலவுகளுக்கு வரவு வைத்துள்ளமையால் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு முற்பணங்கள் ரூபா 669,515 குறைவாகவும் ஆண்டிற்கான செலவுகள் அதே தொகையால் மிகையாகவும் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(உ) ஜைய்கா நிறுவனத்தின் மூலம் குழாய் செயற்திட்டமொன்று வழங்கியமை தொடர்பாக செலுதத வேண்டிய தொகையாக ரூபா 450,641 தொகைக்காக கடன் கொடுத்தோரின் கீழ் ஏற்பாடுகள் மேற்கொண்டிருந்த போதிலும் அச் செயற்திட்டம் அமுல் நடாத்தப்படாமையால் ஆண்டிற்கான செலவுகள் மற்றும் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கடன் கொடுத்தோர் ரூபா 450,641 வீதம் மிகையாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

1.3.2 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

---------------------------------------------------------------------------------------------

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்ளின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 17,620,630 ஆக காணப்பட்டதுடன் செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 25,288,272 ஆகும்.

1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மைகள்

---------------------------------------------------------------------

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 648,255,255 இற்கான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியாதிருந்தது.

1.3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை

-------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
| --- | --- |
| (அ) 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சார் சட்டம் 2008 ஜனவரி 25 திகதிய இலக்கம் 1523/16 கொண்ட அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தல் | 2014 ஆண்டிற்காக சபையில் இருந்து வர்த்தக அனுமதிப்பத்திரம் பெற்றிருந்த 16 வர்த்தக நிலையங்களை வர்த்தமானி அறிவித்தலின் (இ) பட்டோலையின் கீழ் எடுக்கப்படக் கூடிய தொழில் முயற்சிகளா என கணிப்பீட்டின் மூலம் இனங்கண்டு சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்கியிருக்கவில்லை. |

(ஆ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள்

| | | |
|---|---|---|
| (i) | நிதிப் பிரமாணங்கள் 396(ஈ) | வழங்கப்பட்டு 06 மாதங்களை கடந்துள்ள ஆனால் கொடுப்பனவுக்காக வங்கிக்கு சமர்பிக்கப்படாத ரூபா 47,575 பெறுமதியான 03 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ii) | நிதிப் பிரமாணங்கள் 571 | 24 சந்தர்ப்பங்களில் சபையில் பணம் வைப்புச் செய்துள்ள 02 வருடங்களை கடந்துள்ள ரூபா 42,384 பெறுமதியான வைப்புக்களை உரிமையளிப்பு செய்திருக்கவில்லை. |
| (iii) | நிதிப் பிரமாணங்கள் 571 மற்றும் 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி 212 | சபைக்கு கிடைத்திருந்த ரூபா 132,500 பெறுமதியான 5 பல்கரும நடமாடும் கடைகள் மற்றும் ரூபா 387,500 பெறுமதியான 392 கொடிக் கம்பங்கள் இருப்பு பதிவேடுகளுக்கு அல்லது பொருட் பதிவேட்டிற்கு உட்படுத்தியிருக்கவில்லை. |

(இ) இலங்கை குடியரசின் தாபனக் கோவை — சபையில் கடமையாற்றிய விட்டு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள 06 ஊழியர்களிடம் 05 வருட காலமாக அறவிடப்படாமல் காணப்படும் ரூபா 25,530 இற்கான பதவியணிக் கடனை அறவீடு செய்திருக்கவில்லை.

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 959,241 ஆகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சமர்பித்திருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு ரூபா 11,637 ஆகும். இதன் பிரகாரம் ரூபா 947,604 இற்கான அனுகூலமான முரண் ஒன்று அவதானிக்கப்பட்டது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 760,874 மற்றும் முத்தரை கட்டணம் ரூபா 1,532,352 தொகை ஒன்று கிடைக்க வேண்டியிருந்தது.

3 செயற்பாட்டு மீளாய்வு

--------------------------------

3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

-----------------------------------------------

2013 ஆண்டின் போது நெறிமுறை அடிப்படையின் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் இடமேகம இஹல தெஹிகஸ்தென்ன படிக்கட்டு கட்டும் நிர்மாண வேலைக்காக வழங்கியிருந்த ரூபா 50,000 தொகையில் இருந்து குறிப்பிட்ட செயற்திட்டத்தை மேற்கொள்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

4 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்